## நாணயச் சபை

## இலங்கை மத்திய வங்கி

2021 மாச்சு 18 | வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் | 2021இன் 04ஆம் இலக்கம்

---

### உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியினால் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்படும் முதலீடுகள்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1)ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கிணங்க விடுக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி, வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினை தளர்த்தும் நோக்குடனும் வங்கிகளினால் செய்யப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல்களின் சாத்தியமான/ வாய்ப்பான கணிசமான தொகையினையும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீது இதன் தாக்கத்தினையும் பரிசீலனையில் கொண்டு 2021 மாச்சு 23ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 2021 ஏப்பிறல் 09ஆம் நாள் வரையான காலப்பகுதியில் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதனை இடைநிறுத்துமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் இத்தால் அறிவிக்கிறது.

ஒப்பம்
**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்